செ.வெ.எண் : 31/மே நாள் : 15.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஒழுங்குமுறை விற்பனைகூட சேமிப்புக் கிடங்கிலிருந்து இன்று (15.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்களை காவல் துறை பாதுகாப்புடன் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு நாளை (மே 16) நடைபெறவுள்ளது. மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவிற்காக மொத்தம் 747 அமைவிடங்களில் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 119 மண்டல அலுவலர்களும், 1307 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 3994 வாக்குச்சாவடி அலுவலர்களும் நியமிக்கப்பட்டு தேர்தல் பணியில் ஈடுபடவுள்ளனர். தேர்தல் வாக்குச்சாவடி பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கான பணி ஆணை இன்று வழங்கப்பட்டுள்ளது. பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில், வாக்குப்பதிவில் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்திடும் வகையிலும், பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 395 வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவினை நேரடியாக வலைதளத்தில் ஒளிபரப்பு செய்திடவும், 70 வாக்குச்சாவடி மையங்களில் வெப்கேமரா மூலம் பதிவு செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய துணை இராணுவப் படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு காவல் துறை பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்குப்பதிவு செய்திட சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனவே, சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.இரா.இராம்பிரதீபன் உட்பட அரசு அலுவலர்கள்,செய்தியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**